**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், பரமக்குடி**

**முன்னிலை : திரு. M.அறிவு, B.Sc., B.L.,**
**சார்புநீதிபதி,**
**பரமக்குடி.**

**2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01 ஆம் நாள் புதன்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம், ஆனி மாதம் 17–ம் நாள்**

**MCOP.No.12/2024**

**CNR NO:TNRMOA-000266-2024**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகா, தே.புதுக்கோட்டை அஞ்சல், குறிச்சி கிராமம், மேலக்குடியிருப்பு, கதவு எண் 14 என்ற முகவரியில் வசிக்கும் வயிரவன் மகன் இந்து சுமார் 70 வயதுள்ள கணபதி.

.... மனுதாரர்

/எதிர்/

1) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி டவுன், சிங்காரத்தோப்பு, கதவு எண்.2/96 D2 என்ற முகவரியில் இயங்கிவரும் Dr.சுரேஷ் மெட்ரிக்குலேசன் பள்ளி, அதன் தாளாளர் மூலம்.

2) மதுரை மாவட்டம், மதுரை டவுன், பைபாஸ் ரோடு, ஹோட்டல் லெட்சுமி பவன் அருகில், கதவு எண் 184/25 KPS ஷாப்பிங் ஆர்கார்ட் முதல் தளத்தில் இயங்கி வரும் பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், அதன் மேலாளர், TP Claims மூலம்

...எதிர்மனுதாரர்கள்

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்: 06.06.2024

மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 13.06.2024

இம்மனு இந்நீதிமன்றம் முன்பு 24.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.K.வெங்கடேசன்

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:27:51 +0530

அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தினகரன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முகுந்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தனக்கு வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மோட்டார் வாகன திருத்த சட்டம் 1994 (Amended) பிரிவு 166ன் படி இழப்பீட்டு தொகையாக ரூ.10,00,000/-ஐ மனு தாக்கல் தேதியிலிருந்து 12% வட்டியுடனும் மேற்படி மனுதாருக்கு எதிர்மனுதாரர்களை கொடுக்ககோரி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின்சுருக்கம்:**

i) விபத்து தினமான கடந்த 06.01.2024ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் மனுதாரர் தனது வயலுக்கு செல்வதற்காக குறிச்சி to முனைவென்றி செல்லும் தென்வடல் ரோட்டில் இடதுபக்கமாக தனது சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது அவருக்கு பின்னால் வந்த TN 65 AW 1354 என்ற Dr.சுரேஷ் மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு சொந்தமான மகேந்திரா Tourister பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் சென்ற சைக்கிளில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு இடது கையில் எலும்பு முறிந்தும், இரண்டு கால்களிலும் எலும்பு முறிந்தும் மற்றும் உடம்பு முழுவதும் கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது. காயம்பட்ட மனுதாரரை முதலில் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:27:56 +0530

கொண்டு சென்று அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்களாக இருந்ததால் உடனடியாக சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதன்பின்னர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து 06.01.2024ம் தேதி முதல் 31.01.2024ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று தற்போது வரை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

ii) மனுதாரர் விபத்துக்கு முன்பு நல்ல திடகாத்திரமான உடல்நிலையுடன் தனக்கு சொந்தமான விவசாய நிலங்களில் விவசாயம் செய்தும், பாரத பிரதமரின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் வேலை செய்தும் வந்துள்ளார். அதன் மூலம் மாதம் ரூ.20,000/- சம்பாதித்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்துள்ளார். தற்போது அவருக்கு ஏற்பட்ட விபத்தினால் தனது அன்றாடக்கடமைகளைக்கூட அடுத்தவர் உதவியின்றி செய்ய முடியவில்லை. இதனால் மனுதாரர் விபத்துக்கு முன்பு பார்த்து வந்த வேலையை செய்ய இயலாமல் வருமானம் இன்றி கஷ்டப்பட்டும், சிகிச்சைக்காக வாங்கிய கடனை அடைக்க முடியாமலும் கஷ்டப்பட்டு வருகிறார்.

iii) மேற்படி விபத்து தொடர்பாக TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister School Bus என்ற வாகனத்தின் வாகன ஓட்டுநர் மீது இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.12/2024 என்ற எண்ணில் இதச பிரிவுகள் 279, 337@ 279, 337, 338ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister School Bus என்ற வாகனத்தின் வாகன ஓட்டுநரின் அதிக வேகமும் அஜாக்கிரதையுமே முக்கிய காரணமாகும். எனவே, வாகன உரிமையாளர் என்ற

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:00 +0530

முறையில் 1ம் எதிர்மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை 2ம் எதிர்மனுதாரரின் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரும் மனுதாரருக்கு நஷ்டஈடு தர கடமைப்பட்டுள்ளனர். மனுதாரர் மேற்படி விபத்தினால் தனக்கு ஏற்பட்ட இழப்பாக வலி மற்றும் துன்பத்திற்கான இழப்பு, மருத்துவமனையில் இருந்தபோது ஏற்பட்ட செலவுகள், உடன் இருந்து பராமரித்தவர்கள் செலவு, எதிர்கால வருவாய் இழப்பு, நிரந்தர இயலாமைக்கான இழப்பு என தனக்கு ஏற்பட்ட ஒட்டு மொத்த இழப்பீடாக ரூ.14,00,000/-ஐ எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு தரவேண்டும் என கருதினாலும்கூட ரூ.10,00,000/- மட்டுமே நஷ்டஈடு கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், சங்கதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனு விபரங்கள் உண்மைக்கு புறம்பானவையாகும் என்றும், எதிருரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இதர விபரங்கள் மறுக்கப்படுகின்றன என்றும், விபத்து நடந்த விதம் பற்றி மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் மேலும், மனுதாரரின் வயது, தொழில், மருத்துவக் கட்டணங்கள், இயலாமை மற்றும் சிகிச்சை காலம் தொடர்பான மனுவில் உள்ள கூற்றுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படாது என்றும், மனுதாரர் ஒவ்வொரு கூற்றுகளையும் முறையான ஆவணச் சான்றுகள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும் விபத்து தினமான 06.01.2024ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் பரமக்குடி-மானாமதுரை மெயின் ரோட்டில் உள்ள குறிச்சி கிராமத்தில் பள்ளிக்கு குழந்தைகளை ஏற்றுவதற்காக குறிச்சி ரோட்டில் மிதமான வேகத்துடன் சாலை விதிகளை கடைப்பிடித்து கவனத்துடன்

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:06 +0530

சென்றுகொண்டிருந்ததாகவும் அப்போது எதிர்த்திசையில் சைக்கிளில் வந்த மனுதாரர் சாலையை கவனிக்காமல் கீழே விழுந்துவிட்டார் என்றும் மேற்படி விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக நடந்தது என்றும், மேற்படி மனுதாரருக்கு இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் வழங்க தேவையில்லை என்றும் எனவே, 1ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>4) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு சட்டப்படியும், சங்கதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனு விபரங்கள் உண்மைக்கு புறம்பானவையாகும் என்றும், எதிருரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இதர விபரங்கள் மறுக்கப்படுகின்றன என்றும், விபத்து நடந்த விதம் பற்றி மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் அவை பொய்யானவை என்றும் உண்மையான விவரத்தை மறைத்து பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார்கள் என்றும் விபத்து நடந்ததாகக் கூறப்படும் தேதியிலும் நேரத்திலும், காப்பீடு செய்யப்பட்ட முதல் எதிர்மனுதாரரின் பள்ளிப் பேருந்தின் பதிவு எண்.TN 65 AW 1354 ஆவணங்களை ஆய்வு செய்ததில், விபத்து நடந்த இடத்தில் அப்பேருந்தை இயக்குவதற்கான செல்லுபடியாகும் வழித்தட அனுமதி இல்லை என்பது தெரியவருகிறது என்றும் விபத்து நடந்த இடம் சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்ட இளையான்குடி காவல் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ளது என்றும் அப்பேருந்திற்கான அனுமதி இராமநாதபுரம் மாவட்ட எல்லைக்குள் மட்டுமே இயக்குவதற்குச் செல்லுபடியாகும் தன்மையைக் கொண்டுள்ளது என்றும் எனவே, விபத்து நடந்த

ARIVU Digitally signed by ARIVU
Date: 2026.07.01 18:28:11 +0530

இடத்தில் அப்பேருந்தை இயக்குவதற்குச் செல்லுபடியாகும் வழித்தட அனுமதி இல்லாத நிலையிலேயே அது இயக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தான் சாலையில் சென்று கொண்டிருந்த வாகனப் போக்குவரத்தைக் கவனிக்காமல், உரிய கவனமின்றி திடீரென தனது மிதிவண்டியைச் செலுத்தி முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் மேற்படி விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக நடந்தது என்றும், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு காயம் ஏற்பட்டிருந்தால், அது ஏற்கனவே குணமாகிவிட்டது என்றும், எந்தஊனமும் இல்லை என்றும், மனுதாரர் ஏற்கனவே நல்ல நிலையில் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார் என்றும் ரூ.10,00,000/- என்ற மிகப்பெரிய தொகையில் இழப்பீடு கோருவது மிகைப்படுத்தப்பட்டதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் உள்ளது. சிகிச்சையின் போது ஏற்படும் செலவுகள் தொடர்பான கூற்றுக்கள் முறையான பில்கள் மற்றும் வவுச்சர்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும், வலி மற்றும் துன்பங்களுக்கான கூற்றுக்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் எனவே, 2ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

1) விபத்து 1வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் கவனக்குறைவினால் ஏற்பட்டதா?

2) 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்களா?

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:15 +0530

3) மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கக்கூடியதா? கிடைக்கக்கூடியதெனில் எவ்வளவு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது?

4) மனுதாருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**6. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:**

மனுதாரர் தரப்பில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.ம.சா.3 விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** இரு தரப்பும் கேட்கப்பட்டது வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கற்றறிந்த இரு தரப்பு வழக்கறிஞர்கள் அவரவர் தரப்பு வழக்குகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள்.

**8. பிரச்சனை எண் 1 மற்றும் 2 க்கான தீர்வு:**

i) மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே பிரமான வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தனது பிரமான வாக்குமூலத்தில் கடந்த 06.01.2024 ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் தனது வயலுக்கு செல்வதற்காக குறிச்சி to முனைவென்றி செல்லும் தென்வடல் ரோட்டில் இடதுபக்கமாக சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது தனக்கு பின்னால் வந்த TN 65 AW 1354 என்ற Dr.சுரேஷ் மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு சொந்தமான மகேந்திரா Tourister பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிக

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:21 +0530

வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தான் சென்ற சைக்கிளில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் மேற்படி விபத்தினால் இடது கைகள் மற்றும் இரண்டு கால்களில் எலும்பு முறிந்தும் மற்றும் உடம்பு முழுவதும் கொடுங்காயங்கள் ஏற்பட்ட தன்னை முதலில் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு தனக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்களாக இருந்ததால் உடனடியாக சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதன்பின்னர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து 06.01.2024 ம் தேதி முதல் 31.01.2024 ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று தற்போது வரை வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்து வந்ததாக குறிப்பிட்டு மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) மேற்படி விபத்து தொடர்பாக TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister School Bus வாகனத்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் மீது இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.12/2024, சட்டப் பிரிவுகள் 279, 337 @ 279, 337, 338 இதச–வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.12/2024 ன் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், பார்வை மகஜர் ம.சா.ஆ.2 ஆகவும், மாதிரி வரைபடம் ம.சா.ஆ.3 ஆகவும், TN 65 AW 1354 என்ற எண்ணுள்ள வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.4 ஆகவும், காயச்சான்றிதழ் ம.சா.ஆ.5 ஆகவும், மதுரை இராராஜி மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.6 ஆகவும், இளையான்குடி காவல்

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:26 +0530

நிலைய குற்ற எண்.12/2024 ன் குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.7 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.8 ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்குப் புத்தகம் ம.சா.ஆ.9 ஆகவும், காயங்கள் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் ம.சா.ஆ.10 ஆகவும், ஊனச்சான்றிதழ் ம.சா.ஆ.11 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) மனுதாரரை பொறுத்தவரையில் விபத்து சம்பவத்தில் TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister School Bus வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மீது தான் தவறு என்றும் Mahendira Tourister School Bus வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து முன்னால் சென்றுகொண்டிருந்த மனுதாரர் மீது மோதிவிட்டதாக கூறி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.12/2024 ன் முதல் தகவல் அறிக்கை என்பதும் அந்த முதல் தகவல் அறிக்கை 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது.

iv) விபத்திற்கு காரணம் இந்த மனுதாரரின் கவனக்குறைவு என எதிர்மனுதாரர்கள் வாதிட்டிருந்தாலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் அழகர்சாமி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது பிரமாண வாக்குமூலத்தில் " **எங்களது வாகனம் பரமக்குடியிலிருந்து சென்று இராமநாதபுரம் மாவட்ட எல்லைக்குள் உள்ள கிராமப்புற பகுதிகளிலிருந்து மாணவர்களை பள்ளிக்கு அழைத்து வருவோம். இராமநாதபுரம் மாவட்ட எல்லைக்குள் செல்ல வேண்டுமெனில்,**

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:31 +0530

**சிவகங்கை மாவட்ட எல்கைக்குள் உள்ள சில கிராமங்களை தாண்டித்தான் செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 65 AW 1354 என்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது காப்புறுதி காலம் 14.10.2023 முதல் 13.10.2024 வரை உள்ளது. மனுதாரர் தரப்பில் விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் காலத்தில் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் நான் ஓட்டிச்சென்ற வாகனம் இராமநாதபுரம் மாவட்ட எல்கைக்குள் தான் செல்ல வேண்டுமென்றும், விபத்து சிவகங்கை மாவட்ட எல்கைக்குள் நடைபெற்றதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது அந்த விபரம் தவறானதாகும். ஏனெனில் இராமநாதபுரம் மாவட்ட எல்கைக்குள் எங்களது வாகனம் பயணிக்க வேண்டியிருந்தாலும், சில இடங்களில் வேறு மாவட்ட எல்கைகளின் வழியாகத்தான் செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. அதை காரணமாக குறிப்பிட்டு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க இயலாது என குறிப்பிடுவது சட்டப்படி தவறாகும்"** என சாட்சியம் அளித்து அவரது தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்.

v) மேலும் பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் கிருஷ்ணப்பிரியா என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் " **நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்ததாகவும் நீதிமன்ற அழைப்பாணையில் டாக்டர்.சுரேஷ் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு சொந்தமாக வண்டி எண்.TN 65 AW 1354ன் அனுமதி கடித விவரம் மற்றும் வாகனத்தின் விவரங்கள் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க ஆவணங்களை**

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:36 +0530

**தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி சீட்டு முதன் முதலில் 11.07.2018 முதல் 10.07.2023 வரையும் அதற்கு பின்னிட்டு 18.08.2023 முதல் 17.08.2028 வரையும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட அனுமதி சீட்டு என்பது எந்த வழித்தடத்தில் வாகனத்தை இயக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு எந்த வழித்தடத்தில் அனுமதி சீட்டு வழங்கப்பட்டது என்றால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உள்ளாக வாகனத்தை இயக்க அனுமதி சீட்டு வழங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தை தவிர வேறு பகுதிகளில் வாகனம் இயக்கப்பட்டிருந்தால் அது விதிமீறல் ஆகும்"** என சாட்சியம் அளித்து அவர் தரப்பில் எ.ம.சா.ஆ.5 மற்றும் எ.ம.சா.ஆ.6 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் **" நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6 ஆவணத்தில் வாகனம் இராமநாதபுரம் மாவட்ட எல்லைக்குள் மட்டும்தான் பயணிக்கவேண்டும் என குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை மோட்டார் வாகன சட்டத்தில் அது சம்பந்தமாக பள்ளி வாகனம் மாவட்ட எல்லைக்குள் இயக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு மாவட்டத்தில் அமைந்துள்ள ரோட்டின் வழியாகத்தான் அந்த மாவட்டத்தின் வேறு பகுதிக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்ட சமயத்தில் அவ்வாறு செல்வதில் தவறில்லை என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக எங்களது ஆவணங்களில் விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பார்த்துத்தான் சொல்லவேண்டும். பள்ளி வாகனங்களில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டிருந்தால்தான் அனுமதி சீட்டு வழங்கவேண்டும் என்றால் சரிதான். வேகக்கட்டுப்பாடு கருவி பொருத்தப்பட்டதால் வாகனம் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:41 +0530

vi) மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் கம்பெனியில் சட்ட அதிகாரியாக பணிபுரியும் பாரதிராஜா என்பவர் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் " **விபத்து வாகனம் TN 65 AW 1354 எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காப்பீட்டு பத்திரத்தின் எண்.OG24-1502-1812 00000244 From 14.10.2023 to 13.10.2024 முடிய உள்ளது. மேற்படி வாகனம் விபத்து தேதியில் விபத்து நேரத்தில் விபத்து நடந்த சாலையில் ஓட்டிச்செல்வதற்கான அரசு அனுமதி இல்லாமல் வாகனத்தை வாகன உரிமையாளர் உபயோகப்படுத்தியுள்ளார். விபத்து வாகனம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் மட்டும் இயக்க அரசு அனுமதி பெற்றுள்ளார். எங்களது காப்பீட்டு நிபந்தனைகளின்படி மேற்படி வாகனத்திற்கு அரசு அனுமதிக்கப்பட்ட சாலையில் சென்று விபத்து ஏற்படுத்தினால் அதற்குரிய நஷ்ட ஈடு வழங்க எங்களது காப்பீட்டு நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த மனுவில் விபத்து வாகனம் அரசு அனுமதி இல்லாத பகுதியில் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தியுள்ள காரணத்தால் எங்களது நிறுவனம் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை. மேற்படி வாகனத்தின் உரிமையாளர் எங்களது காப்பீட்டு நிபந்தனைகளையும் மற்றும் மோட்டார் வாகனச் சட்டவிதிமுறைகளையும் மீறி செயல்பட்ட காரணத்தினால் எங்களது நிறுவனம் மேற்படி மனுதாரருக்கு எந்த வகையிலும் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை"** என சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் " **விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் விபத்து நடந்த தேதியில் என்னுடைய நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். 2வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என**

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:46 +0530

**எதனடிப்படையில் குறிப்பிடுகிறார் என்றால் அனுமதிக்கப்படாத இடத்தில் வாகனத்தை இயக்கியதால் (Route Permit Violation) காப்பீட்டு உரிமத்தை காப்பீட்டு விதிகளின்படி விதிமீறல் என்பதால் இழப்பீடு வழங்க முடியாது. விதிமீறல் சம்பந்தமாக காப்பீட்டு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. (Route Permit Violation) பற்றி காப்பீட்டு பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரிவு 66(3)ல் குறிப்பிட்ட நிபந்தனைகளை கடைபிடிக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது"** என சாட்சியம் அளித்துள்ளார்.

vii) கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாகனம் பள்ளி பயன்பாட்டிற்காக பள்ளி மாணவர்களை அழைத்து வருவதற்கும் மீண்டும் வீட்டிற்கு சென்று விடுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் வாகனம் இராமநாதபுரம் மாவட்ட எல்கைக்குள் இயக்கப்படவேண்டும் என குறிப்பிட்டிருந்தாலும் ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதியில் இருந்து வேறு மாவட்டத்தில் அமைந்துள்ள சாலை வழியாகத்தான் அதே மாவட்டத்தின் வேறு பகுதிக்கு செல்ல முடியும் என்ற நிலையில் பேருந்தை அவ்வாறு தான் இயக்கமுடியும் என வாதிட்டார். ஒரு மாவட்ட எல்கைக்குள் அமைந்துள்ள ஊர்களில் இருந்து மாணவர்களை அழைத்துக்கொண்டு வேறு மாவட்ட எல்கைக்குள் அமைக்கப்பட்டுள்ள சாலை வழியாக வரும்போது விதிமீறல் உள்ளதாக கருத முடியாது என்ற 1ம் எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையது என்றும் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரையில் அவரது வாகனம் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதையும் கருத்தில் கொண்டு காப்பீட்டு விதிமீறல் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:51 +0530

viii) மேலே கண்ட பரிசீலனையில் இருந்து விபத்து வாகனமான TN 65 AW 1354 என்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி காப்பீட்டு பத்திரத்தின் எண்.OG24–1502–1812 00000244 ன் படி காப்பீடு 14.10.2023 முதல் 13.10.2024 வரை உள்ளது என்றும் விபத்து நடந்த தேதி 06.01.2024 என்றும் பள்ளி வாகனத்தில் வேகக்கட்டுப்பாடு கருவி பொருத்தப்பட்டதால் விபத்து வாகனம் வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றும் விபத்து வாகனம் இராமநாதபுரம் மாவட்ட எல்கைக்குள் பயணிக்க வேண்டியிருந்தாலும், சில இடங்களில் வேறு மாவட்ட எல்கைகளின் வழியாகத்தான் செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதையும் கருத்தில் கொண்டு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்.

ix) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 ஆவணங்களை பார்க்கும்போது விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் அந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் புலனாகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள காயச்சான்றிதழ் ம.சா.ஆ.5 ன் வாயிலாக மனுதாரக்கு காயம் ஏற்பட்டு நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டவாறு சிகிச்சையில் இருந்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலே கண்ட பரிசீலனையில் இருந்து முதல் தகவல் அறிக்கை 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களை கருத்தில் கொண்டும் விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றும் விபத்து வாகனமான TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:28:55 +0530

School Bus வாகனத்தை ஓட்டிவந்த 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த விபத்தில் மனுதாரருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும் பிரச்சனை எண்.1க்கு தீர்வு காணப்படுகிறது.

x) விபத்து வாகனமான TN 65 AW 1354 என்ற பதிவெண் கொண்ட Mahendira Tourister School Bus வாகனத்திற்கு விபத்து சமயத்தின்போது காப்பீடு நடைமுறையில் உள்ளது என்பதால் விபத்தை ஏற்படுத்திய Mahendira Tourister School Bus என்ற வாகனத்தின் காப்பீடுதாரர் என்கிற முறையில் 2வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என பிரச்சனை எண்.2 க்கு தீர்வு வழங்கப்படுகிறது.

**9. பிரச்சனை எண் 3, 4 க்கான தீர்வு:**

i) மனுதாரர் கணபதிக்கு இழப்பீடு கிடைக்கக்கூடியதா?, கிடைக்கக் கூடியதெனில் எவ்வளவு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது? மற்றும் அவருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன? என்பது குறித்து தீர்வு காண இரு தரப்பிலும் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

ii) மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தை பொறுத்த வரையில், விபத்திற்கு பின்பு மானாமதுரை அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்த பின்பு சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு அதன்பின்னர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விவரம் மனுதாரர் தாக்கல் செய்த மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் தெரியவருகிறது. மனுதாரர் நீதிமன்றத்தின்

ARIVU Digitally signed by ARIVU
Date: 2026.07.01 18:29:00 +0530

மூலமாக மருத்துவகுழு முன்பாக ஆஜர்படுத்தப்பட்டு மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் 15% என மருத்துவக்குழு மதிப்பீடு செய்யப்பட்டதை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

iii) கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தற்போது ஊன சதவிகிதத்திற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும், மாண்புமிகு உச்சநீதிமன்றமும் 1 சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/- வழங்க உத்தரவிட்டுள்ளது என்றும் எனவே தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு 1 சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/- இழப்பீடு வழங்க வேண்டும் என வாதிட்டார். மேலும் மனுதாரர் தரப்பில் கீழ்க்கண்ட தீர்ப்புரைகள் மேற்கோள் காட்டப்பட்டது.

**1. The Hon'ble High Court of Judicature at Madras in C.M.A.No.464/2025- Rajendiran *Vs* Rajasekar and another.**

**2. The Hon'ble High Court of Judicature at Madras in C.M.A.No.13/2025- M.Revanth Kumar /Vs/ M/s.Sun-X-Concrete India Private Limited and another.**

iv) இந்நிலையில், இவ்வழக்கில் மனுதாருக்கு ஏற்பட்ட விபத்தானது கடந்த 06.01.2024 ம் தேதியன்று நடைபெற்றுள்ளதால் 1 சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/- என இறுதியான தீர்விற்காக எடுத்துக் கொள்ளலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால், மனுதாருக்கு ஏற்பட்ட கொடுங்காயம், வலி, மற்றும் துன்பம், அவருடைய வயது, தொழில், வருமானம், காயத்தின் தன்மை, சிகிச்சை விபரங்கள் கடந்த 06.01.2024 முதல் 31.01.2024 வரையில் 26 நாட்கள் மதுரையில் உள்ள இராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றது ஆகியவைகளை பரிசீலனை செய்து பின்வருமாறு இழப்பீடு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:29:05 +0530

செய்கிறது.ஆகியவைகளை பரிசீலனை செய்து பின்வருமாறு இழப்பீடு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1) | 15% ஊனத்திற்கு(15 X10,000) | ரூ.1,50,000 |
| 2) | மனுதாரரின் காயம், வலி, துன்பம் மற்றும் 26 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்காக | ரூ. 50,000 |
| 3) | மனுதாரரின் உடன் இருந்தோருக்கான செலவுகள்(26X500) | ரூ. 13,000 |
| 4) | ஊட்டச்சத்து | ரூ. 10,000 |
| 5) | மருத்துவ செலவிற்கு மற்றும் எதிர்கால மருத்துவ செலவிற்கு | ரூ. 25,000 |
| 6) | போக்குவரத்து கட்டணம் | ரூ. 5,000 |
| 7) | ஆடைகளுக்கு சேதம் | ரூ. 1,000 |
| | **மொத்தம்** | **ரூ.2,54,000** |

எனவே, ஒட்டுமொத்த இழப்பீடாக மனுதாரருக்கு ரூ.2,54,000/- கிடைக்கத்தக்கது என்று தீர்வு காணப்படுகிறது.

மனுதாரர் தன்னுடைய அசல் மனுவை தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு விதி பிரிவு 24(1)ன் கீழ் 10,00,000/- இழப்பீட்டுத் தொகை கேட்டு தாக்கல் செய்துள்ளார். மனு பரிகாரத்திற்கான நீதிமன்ற முத்திரை கட்டணம் ரூ.372.50/- செலுத்தியுள்ளனர். தற்போது மனுதாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,54,000/- வழங்க வேண்டும் என்று பிரச்சனை எண்.1 மற்றும் 2 க்கு முடிவு காணப்பட்டுள்ளது. மேற்படி இழப்பீட்டுத் தொகை ரூ.2,54,000/- உரிய நீதிமன்ற கட்டணம் ரூ.1,912.50/- செலுத்த வேண்டும். மனுதாரர்

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:29:10 +0530

ஏற்கனவே நீதிமன்ற கட்டணம் ரூ.372.50/-ஐ செலுத்தியுள்ளார். ஆகையால், மீதமுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் ரூ.1,540/-ஐ ஒரு வார காலத்திற்குள் செலுத்த இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,**

1) இந்த மனு செலவுத் தொகையுடன்அனுமதிக்கப்படுகிறது.

2) 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையாக ரூ.2,54,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) இந்த மனுதாரருக்கு கொடுக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி இழப்பீட்டு தொகை ரூ.2,54,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) மனு தேதி முதல் இழப்பீட்டு தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் மனு செலவுத் தொகையுடன் கொடுக்கவேண்டுமென்றும், மேற்படி தொகையை இரண்டு மாதத்திற்குள் இந்நீதிமன்ற வங்கிகணக்கான SUBORDINATE JUDGE, MACT, PARAMAKUDI என்ற பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பரமக்குடி கிளை (IFSC CODE:SBIN0004266 Virtual Account No:PSCM24MCOP122024) எண் முறையில் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்யவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் உரிய நீதிமன்ற கட்டணத்தை இரண்டு வார காலத்திற்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:29:15 +0530

**<u>செலவுத்தொகைபட்டியல்</u>**

| மனுதாரர் தரப்பில் | | எதிர்மனுதாரர்கள் தரப்பில் |
|---|---|---|
| வக்காலத்துரூ. | 10.00 | செலவுத்தொகைபட்டியல் |
| நீதிமன்ற கட்டணம் ரூ. | 1912.50 | தாக்கல்இல்லை |
| வழக்கறிஞர்கட்டணம் ரூ. | 16250.00 | |
| | ----------- | |
| மொத்தம் ரூ. | 18,172.50 | |
| | ----------- | |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால், கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 01 ம் நாள் அன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ARIVU Digitally signed by ARIVU
Date: 2026.07.01
18:29:20 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாய அதிகாரி, பரமக்குடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 கணபதி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

1. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை இணையவழி பதிவிறக்க நகல்
2. ம.சா.ஆ.2 பார்வை மகஜர் இணையவழி பதிவிறக்க நகல்
3. ம.சா.ஆ.3 மாதிரி வரைபடம் இணையவழி பதிவிறக்க நகல்
4. ம.சா.ஆ.4 TN 65 AW 1354 என்ற எண்ணுள்ள வாகனத்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையவழி பதிவிறக்க நகல்
5. ம.சா.ஆ.5 காயச்சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல்

| | | |
|---|---|---|
| 6 | ம.சா.ஆ.6 | மதுரை இராஜாஜி மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி நகல் |
| 7 | ம.சா.ஆ.7 | இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.12/2024 ன் குற்ற இறுதி அறிக்கை இணையவழி நகல் |
| 8 | ம.சா.ஆ.8 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| 9 | ம.சா.ஆ.9 | மனுதாரரின் வங்கி கணக்கு பாஸ் புத்தகம் நகல் |
| 10 | ம.சா.ஆ.10 | மனுதாரருக்குரிய காயங்கள் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் அசல் |
| 11 | ம.சா.ஆ.11 | ஊனச்சான்றிதழ் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:**

எ.ம.சா.1 அழகர்சாமி

எ.ம.சா.2 கிருஷ்ணபிரியா

எ.ம.சா.3 பாரதிராஜா

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| 1 | எ.ம.சா.ஆ.1 | 11.07.2018 ம் தேதியிட்ட TN 65 AW 1354 வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் |
| 2 | எ.ம.சா.ஆ.2 | 11.07.2018 ம் தேதியிட்ட TN 65 AW 1354 வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் |
| 3 | எ.ம.சா.ஆ.3 | 14.10.2023 ம் தேதியிட்ட TN 65 AW 1354 என்ற வாகனம், 2 ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் காப்புறுதி செய்யப்பட்டதற்குரிய பாலிசி ஜெராக்ஸ் நகல் |
| 4 | எ.ம.சா.ஆ.4 | 22.01.2010 ம் தேதியிட்டு அழகர்சாமி பெயரில் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் |
| 5 | எ.ம.சா.ஆ.5 | TN 65 AW 1354 என்ற வாகனத்தின் விவரங்கள் |

ARIVU Digitally signed by ARIVU Date: 2026.07.01 18:29:26 +0530

| | | |
|---|---|---|
| 6 | எ.ம.சா.ஆ.6 | எ.ம.சா.2 க்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அனுமதி கடிதம் |
| 7 | எ.ம.சா.ஆ.7 | காப்பீட்டு பத்திர நகல் பாலிசி |

ARIVU Digitally signed by ARIVU
Date: 2026.07.01 18:29:31 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாய அதிகாரி, பரமக்குடி.

**மோட்டார் வாகன விபத்துக்**
**கோரிக்கை தீர்ப்பாயம், பரமக்குடி,**
**சார்பு நீதிமன்றம்**
**12/2024**
**சீரான/வரைவு உத்தரவு**
**நாள் 01.07.2026**